INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

சட்டவாக்குநர்கள், நிருவாகிகள் மற்றும் ஏனைய தீர்மானம் மேற்கொள்வோர்களுக்கான

# இயலாமைக் கொள்கைச் சுருக்கம்



பத்மனி மென்டிஸ் மற்றும் பினேந்ரி பெரேரா

## சட்டவாக்குநர்கள், நிருவாகிகள் மற்றும் ஏனைய தீர்மானம் மேற்கொள்வோர்களுக்கான

# இயலாமை பற்றிய கொள்கைச் சுருக்கம்

**பத்மனி மெண்டிஸ் மற்றும் பினேந்ரி பெரேரா**

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்

*2019*

சட்டவாக்குநர்கள், நிருவாகிகள் மற்றும் ஏனைய தீர்மானம் மேற்கொள்வோர்களுக்கான இயலாமைக் கொள்கைச் சுருக்கம்

கொழும்பு, 2019

பதிப்புரிமை © 2019 இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்

இல. 2, கின்ஸி டெரேஸ்,
கொழும்பு 8
இலங்கை
மின்னஞ்சல்: admin@ices.lk
URL: www.ices.lk

ISBN: 978-955-580-241-3

9 789555 802413

இப்பிரசுரத்திற்கான பதிப்புரிமையை இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ICES)கொண்டுள்ளது. நூலாசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் உரிய அங்கீகாரத்துடன் இப்புத்தகத்தின் எந்தப் பகுதியும் மீளஉருவாக்கப்படலாம். இப்புத்தகத்திலுள்ள பொருள்கோடல்களும் முடிவுகளும் நூலாசிரியர்களினுடையது என்பதுடன் அவை இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் கருத்துக்களையும் கொள்கைகளையும் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

**அட்டைப்படம் & புத்தக வடிவமைப்பு:** சிந்தா ஜே. முணசிங்க

சட்டவாக்குநர்கள், நிருவாகிகள் மற்றும் ஏனைய தீர்மானம்

மேற்கொள்வோர்களுக்கான

# இயலாமை பற்றிய கொள்கைச் சுருக்கம்

பத்மனி மென்டிஸ் மற்றும் பினேந்ரி பெரேரா

# நூலாசிரியர்களைப் பற்றி

*பத்மனி மென்டிஸ்,* இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் 60 வருடங்களுக்கும் மேலாக இயலாமை மற்றும் புனர்வாழ்வுத் துறையில் பணியாற்றி வருகின்றார். Einar Helander மற்றும் Gunnel Nelson ஆகியோருடன் இணைந்து உலக சுகாதார நிறுவனத்தின், தற்போது இயலாமை அடங்கலான அபிவிருத்தி (DID) என அழைக்கப்படும் சமுதாயம் சார் புனர்வாழ்வின் உலகளாவிய அபிவிருத்தியில் (CBR) முன்னோடியாக செயற்பட்டமை அவரின் மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும். அவரது இவ்வகிபங்கை அங்கீகரிக்கும் வகையில், 1990 ஆம் ஆண்டில், சுவீடன் நாட்டின் Uppsala பல்கலைக்கழகம் Doctor of Medicine Honoris Causa பட்டத்தினையும் 2019 ஆம் ஆண்டில், மலேசியா நாட்டின் Lincoln College பல்கலைக்கழகம் Honorary Professorship மற்றும் Honorary Ph.D. In (உடலியக்கவியல்) Physiotherapy ஆகிய பட்டங்களையும் அவருக்கு வழங்கி கௌரவித்துள்ளன.

*பினேந்ரி பெரேரா* (LLB) (Hons.) (Colombo), (LLM) (Harvard), பட்டம்பெற்ற சட்டத்தரணியும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தில் ஆராய்ச்சி ஆலோசகராகப் பணிபுரிபவருமாவார். அரசியலமைப்புச் சட்டம், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள், இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் ஆகியன அவரது பிரதான ஆராய்ச்சி ஆர்வங்களாகும்.

# நன்றி பகர்தல்

இப்பிரசுரத்தின் வரைவு மற்றும் ஆக்கத்தில் அனைத்து வகைகளிலும் தங்கள் ஆதரவை வழங்கியமைக்காக கலாநிதி. மரியோ கோமஸ் அவர்களுக்கும் இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கும் நூலாசிரியர்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இயலாமைக் கொள்கைச் சுருக்கத்தை மதிப்பாய்வு செய்வதற்காக இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பங்குபற்றியோருக்கும் மற்றும் தங்களின் பெறுமதி மிக்க கருத்துக்களையும், உள்ளீடுகளையும் மற்றும் இப்பிரசுரத்திற்கான சான்றுரையையும் வழங்கிய இரு மதிப்பாய்வாளர்களுக்கும் அவர்கள் தங்கள் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றனர்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கொள்கைச் சுருக்கத்தின் நோக்கம் | 01 |
| பிரிவு ஒன்று: இயலாமை– *ஒரு புதிய வரைவிலக்கணம்* | 02 |
| பிரிவு இரண்டு:இயலாமை உள்ள மக்களின் நிலைமை | 04 |
| பிரிவு மூன்று: இயலாமையைப் பிரதான நீரோட்டத்திற்குட்படுத்தல்மற்றும் உள்ளடக்குதலுக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற முக்கியமான கொள்கை விடயப்பரப்புகள் | 08 |
| பிரிவு நான்கு :கொள்கையை நடைமுறைப்படுத்தல | 19 |

# கொள்கைச் சுருக்கத்தின் நோக்கம்

***சட்டவாக்குநர்கள் நிருவாகிகள் மற்றும்ஏனைய தீர்மானம் மேற்கொள்வோர்களின் பயன்பாட்டிற்காக இக்கொள்கைச் சுருக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.***

இலங்கை மக்கள் அனைவரும்சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் என அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது[1]. ஆகவே, ஏனையோருடன் சமமான அடிப்படையொன்றில், சமூகத்தில் முழுமையான மற்றும் பயனுறுதி மிக்க பங்குபற்றலுக்கு இயலாமையுடைய ஆட்கள் உரித்துடையோராவர். பிரசைகளாகத் தங்களை முழுமைப்படுத்திக் கொள்வதற்கும் நாட்டின் அபிவிருத்தியை நோக்கிய தங்களின் முழுமையான இயலளவைப் பங்களிப்பாக வழங்குவதற்கும் அத்தகைய ஆட்கள் வலுவூட்டப்படுதல் வேண்டும்.

சட்டவாக்க மற்றும் நிறைவேற்று, நிருவாகத் தத்துவங்கள் மக்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது[2]. சட்டவாக்குநர்கள், நிருவாகிகள் மற்றும் ஏனைய தீர்மானம் மேற்கொள்வோரை உள்ளடக்கும் மக்களின் பிரதிநிதிகளினூடாக இவை மக்களால் பிரயோகிக்கப்படுகின்றன[3]. இந்நபர்கள், மக்களின் சார்பாக கொள்கைகளையும் சட்டங்களையும் வடிவமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான பொறுப் பினைக் கொண்டுள்ளனர். இதன் காரணமாக, இந்த கொள்கைச் சுருக்கம் அவர்களுக்கு விளக்கமளிக்கிறது.

இயலாமையுடைய ஆட்கள் யார், அவர்களின் பாதிப்புறும் மற்றும் ஓரங்கட்டப்பட்ட நிலை, பிரதான நீரோட்டத்திற்கு உட்படுத்தல் மற்றும் உள்ளடக்குதலுக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற முக்கியமான கொள்கை விடயப்பரப்புகளின் சுருக்கம்[4] மற்றும் இத்தகைய கொள்கைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படலாம் என்பன குறித்து பயன்படுத்துவோருக்கு இக் கொள்கைச் சுருக்கம் தெரியப்படுத்துகின்றது.

அதே வேளையில், எமது பாராளுமன்ற உறுப்பினர்கள், கொள்கை உருவாக்குநர்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட தீர்மானம் மேற்கொள்வோர் ஆகியோரிடமிருந்து எவற்றை அவர்கள் எதிர்பார்க்க வேண்டும் என இயலாமையுடைய மக்களுக்கும் ஏனைய அக்கறையுடைய தரப்பினருக்கும் இக்கொள்கைச் சுருக்கம் தெரிவிக்கின்றது.

1 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 12 (1)
2 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரைகள் 3 மற்றும் 4
3 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரைகள் 3 மற்றும் 4
4 இயலாமை அடங்கலானஅபிவிருத்தி(DID)எனத் தற்போது அழைக்கப்படும் ஓர் அணுகுமுறை. UNDPஇல் இயலாமை அடங்கலான இவரது பிரதான ஆராய்ச்சி ஆர்வங்கள், அபிவிருத்தி. file:///C:/Users/user/Downloads/UNDP-_Disability_Inclusive_Development accessible%20(3).pdf

# பிரிவு ஒன்று

## இயலாமை – ஒரு புதிய வரைவிலக்கணம்

இன்று, இயலாமை வரையறுக்கப்படுகின்ற மற்றும் நோக்கப்படுகின்ற விதத்தில் முழுமையான புதிய மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது. இது தற்போது, மனிதர்கள் வாழும் சுற்றாடலுடன் தொடர்புபட்ட அவர்களின் சுகாதார நிலையினால் வரையறுக்கப்படுகின்றது. சுகாதார நிலையானது, நாளாந்த வாழ்வில் மனிதரொருவர் எவ்வாறு தொழிற்படுகின்றார் என்பதாக நோக்கப்படுகின்றது[5]. மனிதரொருவர் தொழிற்படும் விதம் 3 விடயப்பரப்புகளின் மீது தங்கியுள்ளது.

*முதலாவது* விடயப்பரப்பு, ஆளொருவரின் உடலைக் கட்டமைக்கும் பகுதிகள் அல்லது அங்கங்கள் ஆகியவற்றி ற்கமைவானதாகும் (உதாரணமாக, கண்கள், காதுகள், குரல்வளை, தசைகள், மூட்டுகள், நரம்புகள், மூளை மற்றும் மனம்).

*இரண்டாவது* ஆளொருவரின் உடல் நாளாந்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விதமாகும். பார்த்தல், கேட்டல், பேசுதல், தொடர்பாடல் மேற்கொள்ளல், நகர்தல், ஒருவரின் சுயத்தைப் பராமரித்தல், கற்றல் மற்றும் நடந்து கொள்ளும் விதம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

*மூன்றாவது* விடயப்பரப்பு, ஒரு ஆள் ஏனைய மக்களுடன் எவ்வாறு இடைவினையாற்றுகின்றார் அதாவது, சமூக வகிபங்கொன்றினை மேற்கொள்கின்றார் என்பதாகும். உதாரணமாக, பணி மற்றும் தொழில்வாய்ப்பு, பாடசாலைக்கல்வி, விளையாட்டு, குடும்பமொன்றின் பகுதியாகவிருத்தல், சமுதாயம் மற்றும் சமூகம் போன்றவற்றை இவை உள்ளடக்குகின்றன. சமூக மனப்பான்மைகள் மற்றும் அணுகும் வசதியற்ற கட்டடங்கள் மற்றும் பொது வெளிகள் போன்ற சுற்றாடலிலுள்ள தடைகளின் காரணமாக சமூக வகிபங்கொன்றைக் கொண்டிருப்பதில் சிரமங்களைக் கொண்டிருப்பவராகவும் இயலாதவராகவும் ஆக்கப்படுகின்றார்.

---

[5] தொழிற்படுகை, இயலாமை மற்றும் சுகாதாரம் ஆகியவற்றின் சர்வதேச வகுப்பாக்கம் (ICF). WHO 2001. 2001 ஆம்ஆண்டில் WHO இனால் ICFவகுத்தமைக்கப்பட்டது. தனியாட்களின் மனப்பான்மைகளைப் பார்க்கிலும் சமூக மற்றும் சுற்றாடற் காரணிகளின் சூழமைவில்,குறைபாடு, செயற்பாட்டு வரையறை மற்றும் பங்குபற்றல் மட்டுப்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட இயலாமை பற்றிய வரைவிலக்கணத்தை இது பயன்படுத்துகின்றது. https://www.who.int/classifications/icf/en/.

இம்மூன்று விடயப் பரப்புகளும் தொழிற்படவேண்டிய விதத்தில் தொழிற்பட்டால், நபரொருவரின் சுகாதாரம் மற்றும் தொழிற்பாட்டில் பிரச்சினையெதுவும் ஏற்படாது. *ஆயினும், ஒரு சுகாதார நிலைமை அல்லது நோய் அல்லது விபத்து ஆகிய விடயப்பரப்புகளில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு அல்லது அவை அனைத்தும் தொழிற்படும் விதத்தை மாற்றியிருப்பின், அந்த ஆள் இயலாமை உடையவரெனக் குறிப்பிடப்படுகின்றார்.*

இயலாமை என்பது நபரொருவர் தொழிற்படுவதற்கு சிரமத்தை ஏற்படுத்தும் தடைகளுடன் சேர்த்து, அந்நபரின் சுகாதார நிலையில் ஏற்படும் மாற்றமொன்றை விபரிக்கும் சொற்பதமாகும்[6]. மனிதர்கள் எவரும் தங்களின் சுகாதார நிலையில் மாற்றமொன்றை சந்திக்கலாம் என்பதுடன், இதனால், எந்த மனிதரும் இயலாமையைக் கொண்டிருக்கலாம். கடந்த காலங்களில் வரையறுக்கப்பட்டவாறாக, இது நபரொருவரின் குணாதிசயமல்ல.

இவ்விதத்தில் வரையறுக்கப்படும் இயலாமை, மனிதராகவி - ருப்பதன் பகுதியொன்றாகும்.இது மனிதப் பல்வகைமையின் ஒரு பகுதி. இது எம்மில் ஒரு பகுதி.மனிதர்களாக, இயலாமை எம்மை வித்தியாசப்படுத்துவதில்லை. மனிதர்களாக, நாம் அனைவரும் ஒரே உணர்ச்சிகள், மனவெழுச்சிகள், தேவைகள் மற்றும் அபிலாஷைகளைக் கொண்டுள்ளோம். நாம் அனைவரும் ஒரே உரிமைகளையும் பொறுப்புகளையும் கொண்டுள்ளதுடன் ஏனைய அனைத்து மக்களும் கொண்டுள்ள அதே வாய்ப்புகளையும் அதே தெரிவுகளையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

## *இயலாமை - சுருக்கம்*

| | |
|---|---|
| இயலாமை என்பது: | சமூக ரீதியான தடைகளுடன் இணைந்த, மனிதரொருவரின் சுகாதார நிலையிலுள்ள மாற்றங்கள் காரணமாக நாளாந்த வாழ்வில் ஈடுபடுவதில் காணப்படும் சிரமம். |
| இயலாமைத் தேவைகள்: | மனித வாழ்வின் நிலைமையொன்றாகவும் மனிதப் பல்வகைமையின் பகுதியொன்றாகவும் நோக்கப்படுதல் |
| இயலாமையுடைய மக்களுக்கு: | சுற்றாடல் ரீதியான தடைகள் மற்றும் சமூகத்தின் எதிர்ப்பு மனப்பான்மைகள் ஆகியவற்றினால் சமூகத்திற்குத் தங்கள் பங்களிப்பை வழங்குவதற்கான அணுகும் வசதி மறுக்கப்படுகின்றது |
| இயலாமையுடைய மக்கள்: | ஏனைய மக்களைப் போன்று அதே உரிமைகள், பொறுப்புகள், வாய்ப்புகள் மற்றும் தெரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். |

[6] 2006ஆம் ஆண்டின் இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான ஐநா சாசனம் (CRPD) அதன் வரைவிலக்கணங்களில் இயலாமையை உள்ளடக்கவில்லை. இது, தோற்றம் பெற்று வரும் எண்ணக்கருவொன்றாக இயலாமையை நோக்குகின்றது. அதன் முகவுரை மற்றும் 1 ஆம் உறுப்புரையில், “பல்வேறு தடைகளின் இடையீட்டுடன் சமூகத்தில் ஏனையோருடன் சமமான அடிப்படையொன்றில் தங்கள் முழுமையான மற்றும் பயனுறுதி மிக்க பங்குபற்றலை வழங்குவதைத் தடுக்கக்கூடியதான நீண்ட கால உடல், உள, அறிவுசார்மற்றும் புலன்சார் குறைபாடுகளைக் கொண்டுள்ளோரை“ உள்ளடக்குவோராக இயலாமை உள்ள ஆட்களை இதுவிபரிக்கின்றது. https://www.un.org/development/desa/disabilities/convention-on-the-rights-of-persons-with-disabilities/

# பிரிவு இரண்டு

## இயலாமை உள்ள மக்களின் நிலைமை

**தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள்:** 2012 இன் தேசிய தொகைமதிப்புத் தரவுகள், 8.7%[7]என்னும் இயலாமை நிலவும் வீதம் காணப்படுவதைக் குறிப்பிடுகின்றன.10.0 வீதத்திற்கும் மேலான இயலாமை உள்ளோர் சனத்தொகையை கொண்டுள்ள மாவட்டங்களாக நுவரேலியா, கண்டி மற்றும் இரத்தினபுரி ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன; யாழ்ப்பாணம், திருகோணமலை, புத்தளம், குருநாகல், கேகாலை, பதுளை, மொனராகலை, மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 9.1–9.6 வரையான வீதங்கள் நிலவுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது; முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் 8.5 – 9.0 வரையான வீதங்கள் நிலவுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது; ஏனைய அனைத்து மாவட்டங்களும் 7.0 – 8.4 இற்கிடையேயான வீதங்களைக் கொண்டிருந்ததுடன் ஆகக்குறைந்ததான 7.0 வீதத்தைக் கொழும்பு பதிவு செய்கின்றது. நடத்தல், பார்த்தல், கேட்டல், கவனம் செலுத்துதல் மற்றும் நினைவுபடுத்தல் (அறியும் ஆற்றல்), சுய பராமரிப்பு மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தொழிற்பாட்டுக் குறைபாடுகளைக் கொண்டுள்ளோரையும் தேசிய தொகைமதிப்பு இனங்கண்டுள்ளது.[8] இனங்காணப்பட்டோரில் பெருமளவிலானோர் பார்த்தலில் சிரமங்களைக் கொண்டிருந்ததுடன் அதற்கடுத்ததாக நடப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவோரும் பின்னர் கேட்டலில் சிரமங்களையும் எதிர்நோக்குவோரும் காணப்படுகின்றனர்.[9]

தேசிய தொகைமதிப்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட

---

[7] 2012இன் தேசிய சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு இறுதி அறிக்கை. தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம்.http://www.statistics.gov.lk/page.asp?page=Population%20and%20Housing

[8] இயலாமை உள்ளோரை இனங்காண்பதற்காக **இயலாமைப் புள்ளிவிபரங்கள் பற்றிய வாஷிங்டன் குழு**வினால் (**The Washington Group on Disability Statistics**) தயாரித்தமைக்கப்பட்ட சுருக்க வினாவை 2012 இன் தேசிய தொகைமதிப்பு பயன்படுத்தியது. இவையே சுருக்க வினாத் தொகுதியினால் இனங்காணப்பட்ட இயலாமையின் வகைகளாகும்.இக்குழு ஐநாவின் புள்ளிவிபர ஆணைக்குழுவின் கீழ் தாபிக்கப்பட்டதாகும்.தொகை மதிப்புகள் மற்றும் தேசிய அளவைகளுக்குப் பொருத்தமான இயலாமைத் தரவு சேகரிப்பில் கவனம் செலுத்தி, சுகாதாரப்புள்ளிவிபரவியல் விடயப்பரப்பில் சர்வதேச ஒத்துழைப்பிக் மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு என்பதே இதன் ஆணையாகும்.http://www.washingtongroup-disability.com/

[9] 2012இன் தேசிய சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு இறுதி அறிக்கை. தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம்.op cit 7

8.7%என்னும் வீதமானது 5 வயதிற்கு மேற்பட்ட இயலாமை உள்ள 1,617,924 இலங்கையர்கள் என்னும் தொகையாக உருமாற்றப்படுகின்றது. ஆயினும், இயலாமை உள்ள மக்களின் தொகை நிலையானதல்ல. சனத்தொகை அதிகரிப்பு, வயது முதிர்வு, நாட்பட்ட நோய்களின் அதிகரிப்பு மற்றும் உயிர் வாழ்வதை நீட்டிப்புச் செய்வதும் பேணுவதுமான மருத்துவ ரீதியான முன்னேற்றங்கள் ஆகியவற்றின் காரணமாக இயலாமை நிலவுகையானது மாறா நிலையிலும் உறுதியாகவும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. குறைபாடுகள் மற்றும் இயலாமைக்கான மிகவும் பொதுவான மருத்துவக் காரணங்கள், நீரிழிவு நோய், இருதய நோய்கள் மற்றும் புற்றுநோய் போன்ற நாட்பட்ட நோய்கள்; வீதிப் போக்குவரத்து விபத்துகள் மற்றும் வன்முறை ஆகியவற்றின் விளைவாக ஏற்படும் காயங்கள்; பிறப்புக் குறைபாடுகள், மந்த போஷாக்கு மற்றும் எச்.ஐ.வீ/எய்ட்ஸ் போன்ற தொற்று நோய்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் இவையனைத்தும் இலங்கையில் அதிகரித்து வருபவையாகக் காணப்படுகின்றன.

***கல்வி:*** தொகைமதிப்பு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியின்போது, இயலாமை உள்ளோராக இனங்காணப்பட்ட 1,548,684 நபர்கள் எவ்வித கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை என்பது உறுத்தலை ஏற்படுத்துகின்றது. முன்பள்ளியில் 2,142 சிறுவர்களும், ஆரம்ப மற்றும் இரண்டாந்தரப் பாடசாலைகளில் 54,311சிறுவர்களும் மாத்திரமே காணப்பட்டதுடன் உயர்கல்வி நடவடிக்கைகளில் 2,076 பேர் ஈடுபட்டிருந்தனர்.[10] இலங்கையில் ஆரம்பப் பாடசாலை ஆட்சேர்ப்பு வீதம் 99%ஆகக் காணப்படுகையில்,[11]இவ்வாறானோர் பாடசாலைக்கு சமுகமளிக்கும் வீதம் (முன்பள்ளிகள் உள்ளடங்கலாக) எவ்வாறு இத்தகைய குறைந்த நிலையில் காணப்படுகின்றது என ஒருவர் கேட்க முடியும். இயலாமை உள்ள தங்களின் பிள்ளைகளுக்கு கல்வி எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணரும் பெற்றோர் அவர்களைப் பாடசாலையில் பதிவு செய்கின்றனர் என்பதே இயலாமை பற்றிய துறையில் பணியாற்றுவோரின் அவதானிப்பாகும். ஆயினும், பாடசாலையிலிருந்து இடை விலகுவோர், விசேடமாக, ஆரம்ப வருடங்களில், மிகவும் அதிகமென அவர்கள் அவதானிக்கின்றனர். பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறும் மிகக் குறைந்தளவிலான எண்ணிக்கையில் இந்நிலை பிரதிபலிக்கப்படுகின்றது. குறைபாடுகள் மற்றும் இயலாமை உள்ள பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதில் எமது பாடசாலை முறைமை இன்னமும் தகுதி வாய்ந்ததாகவில்லை எனத்

---

[10] 2012இன் தேசிய சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு இறுதி அறிக்கை. தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் Ibid

[11] ஆரம்பப் பாடசாலை ஆட்சேர்தல் வீதம். புள்ளிவிபரங்களுக்கான யுனெஸ்கோ நிறுவனம். https://data.worldbank.org/indicator/SE.PRM.NENR

தோன்றுகின்றது.

***பொருளாதாரத்தில் பங்குபற்றல்:*** 15 வயதிற்கு மேற்பட்டோர் சனத்தொகையின் 1,558,852பேர் இயலாமை உள்ளோராக கண்டறியப்பட்ட அதேவேளை, 29வீதமானோர் மாத்திரமே பொருளாதாரரீதியாக முனைப்புடன் செயலாற்றுகின்றனர். நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குவதற்கு 70.9வீதமானோருக்கு வாய்ப்புகள் கிட்டவில்லை.

சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் வளர்ந்தோரிடமிருந்து அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார உரிமைகள் பறித்தெடுக்கப்படும் கவலைக்கிடமான அளவுநிலையை இவ்வுருக்கள் குறிப்பீடு செய்கின்றன. 2012 இல் மேற்கொள்ளப்பட்ட தொகைமதிப்பின் ஊடாகக் கிடைக்கப்பெற்ற  ஒரே தரவு இதுவாகும்.

**இயலாமையின் பொருளாதார மற்றும் சமூக விளைவுகள்***:* பொதுமக்கள் சனத்தொகையில் இயலாமை உள்ள நபர்கள் 1,617,924பேர் காணப்படுகின்றனர் என்னும் இவ்வுருவானது, இத்தனியாட்களின், அவர்களின் குடும்பங்களின், சமுதாயங்களின் மற்றும் முழுச் சமூகத்தின் மீது இயலாமை கொண்டுள்ள சமூக மற்றும் பொருளாதார பின்விளைவுகளின் அளவினை எவ்விதத்திலும் பிரதிபலிக்கவில்லை.

மேலும், இயலாமை உள்ள குடும்ப உறுப்பினர் ஒருவரைக் கொண்டிருத்தல் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரையும் பாதிக்கின்றது என்பதை ஒருவர் நினைவிற் கொள்ள வேண்டும். இயலாமை உள்ள மக்களின் வீதம் 8.7 ஆகக் காணப்படுகையில், தேசிய ரீதியில் குடும்பமொன்றின் அளவு வீதம் 3.9 ஆகக் காணப்படுவதானது, எமது சனத்தொகையில் 34 அல்லது அதற்கும் மேற்பட்ட வீதத்தினர் இயலாமையினால் நேரடியாகப் பாதிக்கப்படுவதற்கான சாத்தியமுள்ளது என்பதை பிரதிபலிபக்கின்றது.

இயலாமையுடன் போராடும் குடும்பங்கள் இலங்கைச் சமூகத்தின் மிகவும் வறுமை நிலையிலுள்ள பிரிவுகளினுள் காணப்படுகின்றன. இயலாமையுடன் தொடர்புபட்ட களங்கம், எதிர்மறைச் சமூக மனப்பான்மைகள், நகர்திறன் குறித்த பிரச்சினைகள், சம்பாதிக்கும் ஆற்றல், சிறுவர் பராமரிப்பில் பிரச்சினைகள் உள்ளிட்ட பல சவால்களின் காரணமாக இக்குடும்பங்கள் வறுமையில் சிக்குண்டிருப்பதற்கு அதிக சாத்தியங்கள் காணப்படுகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் நீடித்த மோதலினால் பாதிக்கப்பட்ட இயலாமை உள்ள உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள், தங்களிடமிருந்த சொத்துக்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமைகளின் இழப்புடனும் அவற்றிற்கும் மேலாக, அவர்கள் அனுபவித்த உள சமூக பேரதிர்ச்சியினாலும் மிகப் பாரியளவிலான வறுமை நிலைக்கும் பாதிப்புறு நிலைக்கும் உட்படுத்தப்பட்டன. நாட்டின் ஏனைய பாகங்களில், தொடர்ந்தும் நிகழும் மைத்துனர்களுக்கிடையேயான திருமணங்களின்

விளைவாக, சிக்கலான மற்றும் பல்வகை இயலாமைகளைக் கொண்ட குழந்தைகள் பிறக்கின்றன. இயலாமை உள்ள மக்களுக்குப் பல மூடநம்பிக்கைகள் களங்கம் ஏற்படுத்துவதுடன் பெரும்பாலும் அவர்களின் குடும்பங்களுக்கும் இது நீண்டு செல்கின்றது. உதாரணமாக, ஒருவர் பயணமொன்றை ஆரம்பிக்கும்போது இயலாமையுள்ள ஆள் ஒருவரைப் பார்க்க நேர்ந்தால், அது துரதிஷ்டத்தைக் ஏற்படுத்தும் எனப் பலர் நம்புகின்றனர். இத்தகைய சமூகத் தடைகள், இயலாமை உள்ள ஆட்களின் நிலைமையை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன் தங்களின் குடும்பங்களுக்கும் சமுதாயங்களுக்கும் மற்றும் தங்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பு வழங்குவதற்குத் தங்களிடமுள்ள ஆற்றல்களைப் பயன்படுத்துவதிலிருந்து அவர்களைத் தடுக்கின்றன. எதிர்மறைச் சமூக மனப்பான்மைகள், உதாரணமாக, இயலாமையுள்ள ஆட்கள் நிர்க்கதி நிலையில் உள்ளதுடன் எப்போதும் மற்றையவர்களிலேயே தங்கியிருப்பர் என நம்புதல்; மற்றும் வேலை வாய்ப்புத் தேடும் இயலாமை உள்ள ஒருவருக்கு வேலையிடத்தில் இடமளித்தல்; அல்லது இயலாமை உள்ள சிறுவர்கள் அணுகும் வசதி கொண்ட விளையாட்டு இடங்களை உருவாக்குதல்; அல்லது இயலாமை உள்ள ஆட்கள் வீடுகளிலேயே முடக்கப்படாது தாங்கள் வேண்டிய இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இயலச் செய்யும் பொருட்டு பொதுப் போக்குவரத்தை அணுகும் வசதி செய்தல் போன்ற எளிய மாற்றங்களை மேற்கொள்ளுதலில் காணப்படும் விருப்பின்மை போன்றவை வழமையாகக் காணப்படுகின்றன. சமூக வாழ்வின் பிரதான நீரோட்டம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிலிருந்து இயலாமை உள்ள மக்களை இந்த சமூக மற்றும் சுற்றாடற் தடைகள் விலக்குகின்றன. இதன் விளைவுகள் பெண்களை விகிதசமமின்றிப் பாதிக்கின்றன.

இயலாமையுடன் போராடும் சிறுவர்களும் குடும்பங்களும் இவ்வழிகளில் முறையியல் ரீதியாகப் பிரதான நீரோட்டத்திலிருந்து விலக்கப்படுவதுடன், அவர்களின் வறுமை நிலைக்கேற்ப இந்த விலக்குதலும் பாரியளவில் காணப்படுவதற்கான சாத்தியமுள்ளது[12]. இதன் பெறுபேறாக, ஒவ்வொரு சமுதாயத்திலும் குறிப்பிடத்தக்களவிலான பாரிய மக்கள் குழு பாதிப்புறு நிலைக்கும் ஓரங்கட்டுதலுக்கும் உட்படுத்தப்படுகின்றது. இந்த ஆட்கள் பங்களிப்பு வழங்குகின்ற, உற்பத்தித் திறன் கொண்ட பிரசைகளாக தங்களின் இயலளவைப் பூர்த்தி செய்வதற்கு இயலாதிருப்பதுடன் இயலாமை-வறுமை-நோய்-இயலாமை என்னும் பலவீனம் ஏற்படுத்தும் சுழற்சியிலிருந்து தங்களை மீட்டெடுப்பதற்கும் இயலாதுள்ளனர்.

[12] இயலாமை பற்றிய தேசியக் கொள்கை (NPD) சமூகநலனோம்புகை அமைச்சு.2004 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. http://data.worldbank.org/country/sri- lanka#cp_wdi (2013)

# பிரிவு மூன்று

## இயலாமையைப் பிரதான நீரோட்டத்திற்கு உட்படுத்தல் மற்றும் உள்ளடக்குதலுக்கான அமைச்சரவை அங்கீகாரம்பெற்ற முக்கியமான கொள்கை விடயப்பரப்புகள்

முன்னைய பிரிவில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ள இயலாமை உள்ள நபர்களின் நிலைமைக்கு அரசாங்கம் உரிய அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் விளைவாக, இயலாமை பற்றிய தேசியக்கொள்கையொன்றிற்கும்[13] தேசிய செயற்றிட்டங்களுக்கும்[14] அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இங்குள்ள முக்கியமான கொள்கை விடயப்பரப்புகள், இயலாமை பற்றிய தேசியக் கொள்கையில் சமர்ப்பிக்கப்பட்டவாறாகவும் அட்டவணைப்படுத்தப்பட்டவாறாகவும் காணப்படுகின்றன. இவை, அக்காலத்தில் இயலாமை உள்ள ஆட்களின் நிலைமை பற்றிய சமூக பொருளாதாரக் கற்கையொன்றின் கண்டறிதல்கள் மீது தெரிவு செய்யப்பட்டன. 2012 இன் தொகைமதிப்பு[15], அவர்களின் நிலை தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. தேசியக் கொள்கையிலுள்ள கொள்கை விடயப்பரப்புகள், அபிவிருத்தி விடயப்பரப்புகளுடன் மேலும் பொருந்துகின்றன.

2016, பெப்ரவரி 08 ஆம் திகதி இலங்கை வலுவாக்கம் செய்த CRPD[16]இனை இப்பிரிவு கருத்திற் கொண்டுள்ளதுஎன்பதும் குறிப்பிடத்தக்கது.

2016 ஒக்டோபர் 05 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட மாரகேஷ் ஒப்பந்தமும்[17] (The Marrakesh Treaty) இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

---

13 இயலாமை பற்றிய தேசியக் கொள்கை2004 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. சமூக நலனோம்புகை அமைச்சு. op cit 12

14 இயலாமைக்கான தேசிய செயற்றிட்டம் – ஒரு பல்துறைச் சட்டகம். சுகாதாரம் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சு, 2014. தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டம் 2016 – 2020. http://www.pmoffice.gov.lk/download/press/D00000000063_EN.pdf

15 2012இன் தேசிய சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு இறுதி அறிக்கை. தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம்.. op cit 7

16 இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான ஐநா சாசனம் (CRPD) 2016இல் வலுவாக்கம் செய்யப்பட்டது. op cit 6

17 2016 ஒக்டோபர் 06 ஆம் திகதி மாரகேஷ் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. http://www.infolanka.com/news/IL/on134.htm

தேசியக் கொள்கை மற்றும் இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான ஐ.நா.சாசனத்தியற்கமைய (CRPD)[18], அனைத்து கொள்கை விடயப்பரப்புகளையும் நடைமுறைப்படுத்தலானது பின்வருவனவற்றின் அடிப்படையில் அமைதல் வேண்டும்:

1. இயலாமை உள்ள நபர்களை, மனிதப் பல்வகைமையினதும் மனிதத் தன்மையினதும் பகுதியொன்றாக, அவர்களின் உள்ளார்ந்த மாண்பு மற்றும் தன்னாட்சிக்கான மதிப்புடன் ஏற்றுக்கொள்ளல்;
2. அனைத்து நபர்களும்சமமாக நடத்தப்படுவதுடன், இயலாமையை அடிப்படையாகக் கொண்டு பாரபட்சம் காட்டப்படாதிருத்தல்;
3. அணுகும் வசதி, வாய்ப்புகள் மற்றும் சமூகத்தில் முழுமையானதும் பயனுறுதி மிக்கதுமான பங்குபற்றல் மற்றும் உட்படுத்தல் ஆகியவற்றிற்கான விருப்பத் தெரிவு ஆகியவற்றினூடாக அனைத்து நபர்களும் வலுவூட்டப்படுதல்;
4. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே சமத்துவம்;
5. சிறுவர்களின் வளர்ந்து வரும் ஆற்றல்கள் மற்றும் முழுமையானதும் கண்ணியமானதுமான வாழ்வொன்றை அவர்கள் அனுபவித்தல் ஆகியவற்றிற்கான மதிப்பளித்தல்.

---

18 இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான ஐநா சாசனம்(CRPD) 2016இல் வலுவாக்கம் செய்யப்பட்டது. உறுப்புரை 3 பொதுக் கோட்பாடுகள் op cit 6

## *நிலையான கொள்கை விடயப்பரப்புகளின் சுருக்கம்*

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| **1. பணி மற்றும் தொழில் வாய்ப்பு** | 1. இயலாமை உள்ள மக்கள், அரச மற்றும் தனியார் துறைகள், ஊதியம் மற்றும் சுய தொழில் அத்துடன் முறைசார் மற்றும் முறைசாரா துறைகள் ஆகியவற்றில் ஒரு வேலைவாய்ப்பிற்கான சுயாதீன விருப்பத் தெரிவொன்றின் ஊடாகத்தொழில் புரிவதற்கான தங்கள் உரிமையைக் கொண்டிருப்பர்.<br>2. தொழில் மற்றும் தரவு வங்கிகள் உள்ளிட்ட தொழிலுக்கமர்த்தல் சேவைகள் மற்றும் தொழில் ஆதரவுச் சேவைகள் ஆகியவற்றில் அவர்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.<br>3. சமமான பெறுமதியுடைய வேலைக்கான சமமான ஊதியம், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வேலை நிலைமைகள், துன்புறுத்தலிலிருந்து பாதுகாப்பு, குறைகளுக்கான நிவர்த்தி மற்றும் தொழில் முன்னேற்றம் ஆகியவை உட்பட நியாயமான மற்றும் சாதகமான தொழில் நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக இயலாமை உள்ள ஆட்களுக்கு நியாயமான இடமளித்தலை தொழில் வழங்குநர்கள் அளித்தல் வேண்டும். | 27 | பிரிவு நான்கு | 3 |
| **2. தொழிற் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி** | 1. இயலாமை உள்ள இளைஞர்கள் மற்றும் வளர்ந்தோர், பிரதான நீரோட்டத் தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | 27 | பிரிவு நான்கு | 3.3 |

---

19 இயலாமை பற்றிய தேசியக் கொள்கை 2004 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. NPDஇலுள்ள இவ்விடயப் பரப்புகள் நாட்டின் அபிவிருத்தி முறைமையிலுள்ள விடயப் பரப்புகளுடன் ஒத்த கருத்துடையவையாகக் காணப்படுகின்றன. கொள்கை உருவாக்கத்திற்காக இயலாமை உள்ள நபர்களின் சமூக பொருளாதார கற்கையொன்றைத் தொடர்ந்து இவை தெரிவு செய்யப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட்டன. op cit 12

20 கொள்கை சுருக்கமாகத் தரப்பட்டுள்ளதுடன் CRPD இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது (உறுப்புரைகள்5 – 30)

21 இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான சாசனத்தின் (CRPD)உறுப்புரைகளில் ( 5 – 30) பட்டியலிடப்பட்டுள்ள உரிமைகள் 2016 இல் வலுவாக்கம் செய்யப்பட்டன.இந்த உரிமைகள் இங்கு ஒவ்வொரு கொள்கை விடயப்பரப்புடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் அதனால் நாட்டின் அபிவிருத்தி முறைமையிலுள்ள விடயப் பரப்புகளுடனும் தொடர்புபடுத்தப்படுகின்றன.

22 2014 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டஇயலாமை பற்றிய தேசிய செயற்றிட்டத்தில் (NAPD) குறிப்பீடு.

23 தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டம் (NHRAP) 2016-2020இல் குறிப்பீடு. குறிப்பீட்டு இல. “இயலாமை உள்ள ஆட்களின் உரிமைகள்” என்னும் (6) ஆம் அத்தியாயத்தைக் குறிப்பீடு செய்கின்றது.

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| | **2.** தங்கள் தெரிவான திறன் ஒன்றில் பயிற்சி மேற்கொள்வதற்கு அவர்களுக்கு நியாயபூர்வமான இடமளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>**3.** தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் ஆளணியினருக்கு இயலாமை உள்ள நபர்களின் தேவைகளை சந்திப்பதற்கான வசதிநிலை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | | | |
| **3. வறுமை ஒழிப்பு மற்றும் வருமானம் ஏற்படுத்தல்** | 1. இனங்காணப்பட்ட வறுமை நிலையின் கீழ் வசிக்கும் இயலாமை உள்ள நபர்கள், வறுமை நிலையிலுள்ளோரின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வலுவூட்டலுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும், சமூகப் பாதுகாப்பு வலைகளிலும், சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | 28 | பிரிவு ஒன்று:<br>7 | 4.1<br>4.2 |
| **4. பாடசாலைக்கல்வி** | 1. இயலாமை உள்ள சிறுவர்களின் கல்வி உரிமைகள், அனைத்து மட்டங்களிலும் உள்ளடங்கலான ஒரு கல்வி முறைமையின் ஊடாக மேம்படுத்தப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும்.<br>2. ஆரம்பத்தில் தேவைப்படுமிடத்து நியாயபூர்வமான இடமளித்தலுடனும் தொடர்ச்சியான ஆசிரியர் பயிற்சி, அணுகும் வசதியுடைய கற்பித்தல் முறைமைகள், மாற்றீட்டு கற்றல் மூலோபாயங்கள், கற்றல் சாதனங்கள், உதவிஉபகரணங்கள், அணுகும் வசதியுடைய பௌதீக சுற்றாடல், அணுகும் வசதியுடைய இணைப் பாடவிதான செயற்பாடுகள் மற்றும்அணுகும் வசதியுடைய விளையாட்டு ஆகியவற்றுடனும் அத்தகைய சிறுவர்களின் முழுமையான பங்குபற்றல்உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>3. பார்வை மற்றும் கேட்டல் மற்றும் ஏனைய குறைபாடுகளை கொண்ட சிறுவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக சைகை மொழி, பிரெய்ல் மற்றும் ஏனைய தொடர்பாடல் வகைகளில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும்.<br>4. இயலாமை உள்ள சிறுவர்களுக்கான விசேட பாடசாலைகள் பதிவு செய்யப்படுவதுடன் | 24 | பிரிவு மூன்று: | 5.1<br>5.3<br>5.4<br>5.5 |

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| | ஒத்ததராதரங்களுடன் இசைந்தொழுகுவதற்காக ஒழுங்கமைக்கப்படுதலும் வேண்டும். | | | |
| **5. முறைசாராக்கல்வி** | 1. பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யாத இயலாமை உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள், தேவைப்படுமிடத்து நியாயபூர்வமான இடமளித்தலுடன் முறைசாரா கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சமமான அணுகலை கொண்டிருப்பர். | 24 | பிரிவு மூன்று: 4 | .. |
| **6. உயர் கல்வி** | 1. பல்கலைக்கழகங்களிலும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களிலும் இயலாமை உள்ள மாணவர்கள் அதிகமானோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.<br>2. தேவைப்படுமிடத்து நியாயபூர்வமான இடமளித்தலுடன் ஆசிரியர் பயிற்சி, அணுகும் வசதியுடைய கற்பித்தல் முறைமைகள், மாற்றீட்டு கற்றல் மூலோபாயங்கள், கற்றல் சாதனங்கள், உதவிஉபகரணங்கள், அணுகும் வசதியுடைய பௌதீக சுற்றாடல், அணுகும் வசதியுடைய இணைப் பாடவிதான செயற்பாடுகள் மற்றும்அணுகும் வசதியுடைய விளையாட்டு ஆகியவற்றின் ஊடாக உயர்கல்வியில் அத்தகைய மாணவர்களின் முழுமையான பங்குபற்றல்உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>3. உயர்கல்வி நிறுவனங்கள் இயலாமை தொடர்பான ஆராய்ச்சியை மேம்படுத்தல் வேண்டும். | 24 | பிரிவு மூன்று; 5 | 5.2 |
| **7. சுகாதாரம்மற்றும் புனர்வாழ்வு** | 1. இயலாமை உள்ள நபர்கள், பலப்படுத்தப்பட்டதான மருத்துவ மற்றும் சுகாதார பராமரிப்பு ஆளணியினரின் பயிற்சி, விசேட சேவைகள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு வசதிகள் ஆகியவற்றின் ஊடாக, தரமான சுகாதாரப் பராமரிப்பு மற்றும் புனர்வாழ்விற்கான மேம்படுத்தப்பட்ட அணுகும் வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>2. உளச் சுகாதாரத்தேவைகளுக்கும்கேட்டல், பார்வை, நகர்திறன், தொடர்பாடல், அறிவுசார் மற்றும் ஏனைய அபிவிருத்திக் குறைபாடுகள் அத்துடன் நடத்தைப் பிரச்சனைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளோரின் தேவைகளுக்கும் பதிலளிக்கும் முன்கூட்டிய இனங்காணல், இடையீடுகள் மற்றும் சேவைகள் | 25, 26 | பிரிவு இரண்டு: | 6 |

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| | போன்ற சுகாதார மற்றும் புனர்வாழ்வு சேவைகள் மேம்படுத்தப்படல் வேண்டும்.<br>3. இயலாமை உள்ள நபர்களுக்கு தரமான சுதேச மருத்துவ பிரயோகங்கள் வழங்கப்படுதல் வேண்டும். | | | |
| **8. விளையாட்டு** | 1. பொழுதுபோக்கு மற்றும் போட்டி நோக்கங்களுக்காக தங்கள் சகபாடிகளைப் போன்று,தங்களின் தெரிவான விளையாட்டுச் செயற்பாடுகளில் இயலாமை உள்ள மக்கள் பங்குபற்றுவர்.<br>2. பாடசாலை மட்டத்தில் ஆரம்பித்து அனைத்து நிருவாக மட்டங்களின் ஊடாகவும் தொடரும்விளையாட்டுக்கு பொறுப்பான அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், அனைத்துப் பொது விளையாட்டுகளிலும் அவர்களின் ஆற்றல்களை அங்கீகரிக்குமுகமாக நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல் வேண்டும்;இயலாமை உள்ள நபர்களுக்கு இடமளிப்பதற்காக தற்போதுள்ள விளையாட்டு விதிகளைத் தழுவுதல் வேண்டும்;பயிற்சி உள்ளிட்ட அனைத்து வசதிகளுக்குமான அணுகும் வசதியை வழங்குதல் வேண்டும்;தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளில் அவர்களின் பங்குபற்றலை ஊக்குவித்தல் வேண்டும் அத்துடன் விளையாட்டு ஆளணியினரின் பயிற்சியில் இயலாமை உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும். | 30 | பிரிவு ஐந்து: 8 | 10 |
| **9. போக்குவரத்து** | 1. 2006[24] மற்றும் 2009[25]இன் அணுகும் வசதிஒழுங்குவிதிகளுக்கமைவாக, பஸ், ரயில், நீர்வழி மற்றும் வான்வழிப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து, இயலாமை உள்ள நபர்களுக்கு அணுகும் வசதி அதிகம் கொண்டதாகவிருத்தல் வேண்டும். இவை நடைமுறைப்படுத்தப்பட | 9 | பிரிவு ஐந்து: 1 | 8.2 |

24 சமூக நலனோம்புகை அமைச்சு, கட்டியெழுப்பப்பட்டுள்ள சுற்றாடலை இயலாமை உள்ள ஆட்கள் அணுகுவதற்கு வசதியேற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்,வர்த்தமானி இலக்கம்: 1, 467/15 (17.10.2006). http://www.hrcsl.lk/PFF/Library_Domestic_Laws/regulations/146_

25 சமூக நலனோம்புகை அமைச்சு, கட்டியெழுப்பப்பட்டுள்ள சுற்றாடலை இயலாமை உள்ள ஆட்கள் அணுகுவதற்கு வசதியேற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்,வர்த்தமானி இலக்கம்.1619/24 – (18.09.2009) https://socialemwelfare.gov.lk/web/images/content_image/pdf/legislation/1619 24e.pdf.

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| | வேண்டுமென உயர்நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது[26].<br><br>2. இயலாமை உள்ள நபர்கள் எதிர்கொள்ளுகின்ற அணுகும் வசதிப் பிரச்சினைகளைக் கையாளுவதற்குப் பங்கீடுபாட்டாளர்கள் பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும். | | | |
| 10. வீடமை -ப்பு | 1. அரசினால் ஆதரவளிக்கப்படும் வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் அரச காணி விநியோகம் ஆகியவை இயலாமை உள்ள நபர்களைப் பயனாளிகளாக உள்ளடக்குதல் வேண்டும். | 28 | பிரிவு ஐந்து:<br><br>7 | 4.4 |
| 11. சமூகப் பாதுகாப்பு | 1. ஓய்வூதியங்கள் மற்றும் காப்புறுதித் திட்டங்கள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், இயலாமை உள்ள நபர்களுக்குக் கிடைக்கப்பெறுதல் வேண்டும். | 28 | பிரிவு ஒன்று:<br><br>7 | .. |
| 12. கட்டி-யெழுப்பப் -பட்டுள்ள சுற்றாடலுக்-கும் அணுகும் வசதியுள்ள சுற்றுலாத்துறைக்கு -மான அணுகும் வசதி | 1. 2006[27]மற்றும்2009[28]இன் அணுகும் வசதி ஒழுங்குவிதிகளுக்கமைவாக, பொதுமக்களால் பயன்படுத்தப்படும் பொது வெளிகள் மற்றும் ஏனைய பிரதேசங்கள், இயலாமை உள்ள நபர்களின் அணுகும் வசதி, பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை இயலச் செய்யும் பொருட்டுதழுவியமைக்கப்படுதலும் வடிவமைக்கப்படுதலும் வேண்டும்.<br><br>2. பிரதான சுற்றுலாத்தலங்கள் இயலுமான வகையில் அணுகும் வசதியுடையவையாக ஆக்கப்படுதல்வேண்டும்.[29]<br><br>3. ஆளணியினரின் பயிற்சி அத்துடன் சுற்றுலாத்துறை பற்றிய தகவல்களின் ஆக்கம் மற்றும் பரப்புகையில் | 9 | பிரிவு ஐந்து:<br><br>2 | 8.1<br><br>10.2 |

[26] *பெரேரா எதிர் சமூக சேவைகள் அமைச்சர்*SC FR இல 221/2009 SC கூட்ட அறிக்கைகள் 27 ஏப்பிரல் 2011; *பெரேரா எதிர் சமூக சேவைகள் அமைச்சர்*, SC FR விண்ணப்ப இல. 273/2018 (18.04.2019) <http://www.supremecourt.lk/images/documents/sc_fr_273_2018.pdf>

[27] சமூக நலனோம்புகை அமைச்சு, கட்டியெழுப்பப்பட்டுள்ள சுற்றாடலை இயலாமை உள்ள ஆட்கள் அணுகுவதற்கு வசதியேற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள்,வர்த்தமானி இலக்கம்: 1, 467/15 (17.10.2006). http://www.hrcsl.lk/PFF/Library_Domestic_Laws/regulations/146_

[28] சமூக நலனோம்புகை அமைச்சு, கட்டியெழுப்பப்பட்டுள்ள சுற்றாடலை இயலாமை உள்ள ஆட்கள் அணுகுவதற்கு வசதியேற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள், Ibid

[29] சமூக நலனோம்புகை அமைச்சு, கட்டியெழுப்பப்பட்டுள்ள சுற்றாடலை இயலாமை உள்ள ஆட்கள் அணுகுவதற்கு வசதியேற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள், வர்த்தமானி இலக்கம்: 1, 467/15 (17.10.2006). http://www.hrcsl.lk/PFF/Library_Domestic_Laws/regulations/146_ op cit 27

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| | இயலாமை உள்ளடக்கப்படுத்தப்படுதல் வேண்டும். | | | |
| **13. தொடர்பாடல்மற்றும்தகவல்களுக் -கான அணுகும் வசதி** | 1. இயலாமை உள்ள ஆட்கள் அனைத்துத் தகவல்களுக்குமான அணுகலைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் சைகை மொழி, பிரெய்ல்மற்றும் ஏனைய பெரிதாக்கும் (augmentative) தொடர்பாடல் முறைமைகளின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்வதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.<br>2. போதிய எண்ணிக்கையிலான சைகை மொழி உரைபெயர்ப்பாளர்கள் பயிற்றுவிக்கப்படுதலும் பதிவு செய்யப்படுதலும் வேண்டும்.<br>3. அச்சிடப்படும் அனைத்து சாதனங்களும் அணுகும் வசதியுடைய அமைப்புருக்களில் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும்[30]. | 9 | பிரிவு ஒன்று: 4 | 8.3 |
| **14. உதவி உபகரணங்க -ள் மற்றும் தொழில்நுட்ப- ங்கள்** | 1. இயலாமை உள்ள நபர்களின் கல்வி, தொழில் மற்றும் சுயாதீன வாழ்க்கைக்கு வசதியளிப்பதற்காக தகுந்த உதவி உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் கிடைக்கச் செய்யப்படவும் அணுகல் வசதியுடையதாதலும் வேண்டும். | 20 | பிரிவு இரண்டு: 10 | 8.4 |
| **15. சிறுவர்கள்** | 1.இயலாமை உள்ள சிறுவர்கள், முன்பிள்ளைப் பருவப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், முன் பள்ளிகள் மற்றும் பாலர் பாடசாலைகள் ஆகியவற்றில் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆன்மீக மற்றும் கலாசார அபிவிருத்தி உட்பட இயலுமான வகையில் முழுமையான சமூக உட்படுத்தல் மற்றும் தனிப்பட்ட அபிவிருத்தி ஆகியவற்றை அடைவதில் பிள்ளைக்குச் சாதகமான விதத்தில் அவர்களின் அதியுச்ச பங்குபற்றல் உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும்.<br>2. இயலாமை உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆதரவளிப்பதற்காக,இயலச்செய்யும் சுற்றாடலொன்றை வழங்குவதற்குப் பெற்றோர் | 7, 23 | பிரிவு ஒன்று 1<br>பிரிவு இரண்டு: | 14 |

[30] இலங்கை, 2016 ஒக்டோபர் 06 ஆம் திகதி மாரகேஷ் ஒப்பந்ததை ஏற்றுக்கொண்டது.இலங்கையின் நிரந்தர தூதுக்குழு,ஜெனீவா. op cit 17

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| | மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் தகுதி பெற்றிருப்பதற்காக, அறிவு, திறன்கள், ஆலோசனை மற்றும் உளவள ஆலோசனை ஆகிய வடிவங்களில் அவர்களுக்கு ஆதரவு கிடைக்கப்பெறுதல் வேண்டும்.<br>3. வளரிளம் பருவத்தினருக்கான இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள், பால்நிலை கூருணர்வில் கவனம் செலுத்தி, இயலாமை உள்ள சிறுவர்களை உள்ளடக்குதல் வேண்டும். | | | |
| 16. இளைஞர்கள் | 1. இயலாமை உள்ள இளைஞர்கள், இளைஞர் அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள், நிகழ்ச்சித்திட்டஙகள் மற்றும் கருத்திட்டங்கள் அனைத்திற்குமான சமமான அணுகலைக் கொண்டிருத்தல் வேண்டும். | 23 | பிரிவு நான்கு:<br>ஐந்து: | 6.5 |
| 17. பெண்கள் | 1. பெண்களின் வளர்ச்சிக்கான ஏதேனும் அரச நிகழ்ச்சித்திட்டம்,இயலாமை உள்ள பெண்களை உள்ளடக்குதல் வேண்டும்.<br>2. பால்நிலை சார் வன்முறையை எதிர்த்துப் போராடும் அரச நடவடிக்கைகள், இயலாமை உள்ள பெண்களையும் பாதுகாத்தல் வேண்டும்.<br>3. திருமணம், குடும்ப வாழ்வு, இனப்பெருக்க உரிமைகள் மற்றும் விவாகரத்து பற்றிய சட்டம் மற்றும் கொள்கை ஆகியவை, இயலாமை உள்ள பெண்களின் தன்னாட்சியைப் பாதுகாப்பதையும் உறுதிப்படுத்துவதையும் கருத்திற் கொள்ளவேண்டும். | 6 | பிரிவு ஒன்று:<br>நான்கு: | 12<br>14 |
| 18. வயது முதிர்ந்த ஆட்கள் | 1. இயலாமை உள்ள வயது முதிர்ந்த ஆட்கள் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டுமென்பதுடன் பாதுகாப்பு உணர்வொன்றுடனும் இயலுமான அளவிற்கு பேணப்படும் அவர்களுக்கான சுந்திரத்துடனும் வாழ்வதற்கு இயலச் செய்யப்படுதலும் வேண்டும். | -- | பிரிவு ஒன்று:<br>இரண்டு: | |
| 19. மோதலுக்-குப் பின்னரானநல்லிணக்கப் | 1. முன்னெடுப்போர், பரிந்து வாதிடுவோர், மோதல் பற்றிய அனுபவங்களில் தங்கியுள்ள நிபுணர்கள், அவதானிப்பாளர்கள், தீர்மானம் மேற்கொள்வோர் மற்றும் பயன்பெறுநர் | 11 | .. | 11.2 |

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| பொறிமுறை -கள் | என்னும் பல்வகை தகைமைகளில் நல்லிணக்கப் பொறிமுறைகளில் இயலாமை உள்ள நபர்கள், உள்ளடக்கப்படுதல் வேண்டும்[31]. | | | |
| 20. தீவிரஇயலாமை உள்ள நபர்கள் | 1. தங்களின் நாளாந்த வாழ்விற்கு உதவி தேவைப்படும் தீவிரமான இயலாமை உள்ள நபர்களுக்கு, சமூகத்திற்கு பங்களிப்பு வழங்குவதற்கான வாய்ப்பினை அவர்கள் கொண்டிருக்கும் பொருட்டு, அவசியமானவிடத்து, வீட்டினை அடிப்படையாகக் கொண்டஅபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும் வழங்கப்படுதல் வேண்டும். | 19 | பிரிவு ஒன்று: இரண்டு: மூன்று: நான்கு: | 7.2 |
| 21. வெகுசன ஊடகம் | 1.சிவில் சமூகத்திற்கு அறிவூட்டுவதற்கும் அதனைத் திரட்டுவதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் அனைத்து வகையான பிரதான நீரோட்ட மற்றும் சமூக ஊடகங்ளினாலும்இயலாமை தொடர்பான தகவல்கள் பரப்பப்படுவதுடன் இதனால் இயலாமை உள்ளநபர்களின் சமூக ஏற்பு மற்றும் உட்படுத்தல் மேம்படுத்தப்படும்.<br><br>2. மாறாவகைப்படுத்தல் மற்றும் எதிர்மறைச் சமூக - கலாசார மற்றும் வழமையான நம்பிக்கைகள் மற்றும் இயலாமை தொடர்பான பிரயோகங்கள், குறிப்பாக இயலாமையைப் பெண்களுடன் தொடர்புபடுத்தல் ஆகியவற்றைக் குறைப்பதற்கு வெகுசன ஊடகங்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 8 | பிரிவு ஐந்து: 3 | 7.1 12 |
| 22. நீதி | 1.இயலாமை உள்ள நபர்கள், ஏனையோருடன் சமமான அடிப்படையொன்றில் சட்டத்தின் செயன்முறை சார் மற்றும் நிலையான காப்பீடுகளுக்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்[32].<br><br>2. விசாரணைகள், வழக்குத் தொடுப்புகள் ஆகியவற்றிலும் சாட்சிகளாகவும், சட்ட | 13 | பிரிவு ஒன்று: 6 | 1.1 11 15 |

[31] தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், 'நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றிய தேசியக் கொள்கை' (2017)https://www.un.int/srilanka/sites/www.un.int/files/Sri%20Lanka/re-submission_of_the_national_policy_on_reconciliation_and_co-existence.pdf

[32] இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 1978, உறுப்புரை 12 (1); 'எதேச்சையாகக் கைது செய்யப்படாமலும், தடுத்து வைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரமும் கடந்த காலத்தைஉள்ளடக்கும் பயனுடையனவான தண்டனைச் சட்டவாக்கங்களைத் தடை செய்தலும் 'பற்றிய உறுப்புரை 13

| தேசியக் கொள்கை விடயப்பரப்பு[19] | CRPD[20]இற்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கைச் சுருக்கம் | CRPD [21] | NAPD [22] | NHRAP [23] |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைமுறைகளின் ஏனைய அனைத்துக் கட்டங்களிலும் மற்றும் மாற்றுப் பிணக்குத் தீர்வுப் பொறிமுறைகள் மற்றும் செயன்முறைகளிலும் வயதிற்குப் பொருத்தமான வகையில் நியாயபூர்வமான இடமளித்தல்வழங்கப்படுதல் வேண்டும்[33].<br><br>3. பொலிஸ், நன்னடத்தை மற்றும் சிறைத்துறைச் சேவைகள் உள்ளிட்ட நீதி நிருவாகத் துறையிலுள்ள ஆளணியினருக்கும் மாற்றுப்பிணக்குத் தீர்வுப் பொறிமுறைகள் மற்றும் செயன்முறைகளில் ஈடுபடுவோருக்கும் பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும்[34]. | | | |
| **23. அரசியல் மற்றும் பொது வாழ்வில் பங்குபற்றல்** | 1. இயலாமை உள்ள நபர்கள், ஏனையோருடன் சமமான அடிப்படையொன்றில், வாக்களிப்பதற்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குமானஅவர்களின் உரிமை மற்றும் வாய்ப்பு உட்பட, நேரடியாக அல்லது சுயாதீனமாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஊடாக, அரசியல் மற்றும் பொது வாழ்வில் பங்குபற்றுதல் வேண்டும்.[35] | 29 | பிரிவு ஒன்று: 5 | 9 |
| **24. அனர்த்த முகாமைத்துவ-ம்** | 1. இயலாமை உள்ள மக்கள், அவசர நிலைமைகளின் போது அதிகரிக்கும் அவர்களின் பாதிப்புறு நிலையை நோக்கியதான கூருணர்வுடன் அனர்த்த முகாமைத்துவ சுழற்சியில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்[36]. | | பிரிவு ஐந்து: 10 | |
| **25. கலாசாரம்** | 1. இயலாமை உள்ள நபர்கள், தங்களின் கலாசார அடையாளங்கள் அத்துடன் கலாசாரச் செயற்பாடுகள் மற்றும் கலைகளில் தங்களின் ஆற்றல்கள், திறன்கள் மற்றும் இயலளவுகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்[37]. | 30 | பிரிவு ஐந்து: 9 | 10.2 |

[33] இயலாமைஉரிமைகள் வரைவுச் சட்டமூலம். சமூக சேவைகள், நலனோம்புகை, மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு. 2015ஆகஸ்ட் 08.

[34] Ibid

[35] Ibid

[36] இயலாமை பற்றிய தேசிய செயற்றிட்டம்2014op cit 22

[37] இயலாமை பற்றிய தேசிய செயற்றிட்டம்2014 Ibid

# பிரிவு நான்கு

## இயலாமை உள்ள மக்களின் நிலைமை

முற்போந்த பிரிவுகளின் பொருளடக்கங்கள் இயலாமை உள்ள ஆட்கள் யார் என வரையறுத்து, அவர்கள் வாழும் நிலைமையை விபரிப்பதுடன் இந்நிலைமையை மாற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படும் கொள்கைகளையும்[38] அட்டவணைப்படுத்துகின்றன. அப்பிரிவுகள், கொள்கை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிப்பதற்கான அடிப்படையை ஏற்படுத்துவதற்கு வழியேற்படுத்துகின்றன[39].

**இயலாமைக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் கீழே செயன்முறையாகத் தரப்பட்டுள்ளது**

***கொள்கை மற்றும் அணுகுமுறையை நடைமுறைப் இருவழி அணுகுமுறை படுத்துவதற்கான வழிமுறைகள்:***

கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான இரு தெளிவான வழிமுறைகள் முற்போந்த ரிவுகளிலிருந்து எழுகின்றன. ஆகவே, கொள்கையானது ஒன்றினுள் நடைமுறைப்படுத்தப்படும். உரு 1 இனைப் பார்க்க இயலாமை உள்ள பெரும்பாலான நபர்கள் இரண்டு ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட வழிகளிலும் பங்குபற்றுவர். ஒரு புறத்தில் அவர்கள் வறுமை மற்றும் பாதிப்புறு நிலையில் காணப்படுவதுடன் மறுபுறத்தில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு விலக்கி வைக்கப்படுகின்றனர்[40].

***இருவழிஅணுகுமுறை கீழே விபரமாகத் தரப்பட்டுள்ளது.***

---

38 இயலாமை பற்றிய தேசியக் கொள்கை 2003 மற்றும் இயலாமை பற்றிய தேசிய செயற்றிட்டம் (2014)ஆகியவற்றில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.CRPDஇல் தரப்பட்டுள்ள உரிமைகளையும் இவை கருத்திற் கொண்டுள்ளன.

39 CRPD உறுப்புரை 4. பொதுக் கடப்பாடுகள். குறிப்பீடு:பொருத்தமான சட்டவாக்க, நிருவாக மற்றும் ஏனைய நடவடிக்கைகள்

40 இக்கொள்கைச் சுருக்கத்தின் இரண்டாம் பிரிவைப் பார்க்க

## உரு. 01: இயலாமைக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கானஇருவழிஅணுகுமுறை

**இயலாமைக் கொள்கை நடைமுறைப்படுத்தல்[41]**

***வழி ஒன்று***

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழுகின்ற, வறிய மற்றும் பாதிப்புறு நிலையிலுள்ள இயலாமை உள்ள நபர்கள், பலமானதொரு சமூகப் பாதுகாப்பு வலையின மூலம் உயர்த்தப்படுவர்.

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்

- வறுமை நிலையில் தேவைகளுடன் வசிக்கும் இயலாமை உள்ள நபர்களை கண்டறிதல் பயனுறுதி வாய்ந்ததாக ஆக்கப்படுதல்.
- தரம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றிற்கமைய சமூக நலனோம்புகை, சேவைகள் மற்றும் பாதுகாப்பு மேம்படுத்தப்படல்
- இயலாமை உள்ள மக்களின் குரல்களைப் பலப்படுத்துவதற்காக அவர்களின் அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு உதவிகள் கிடைக்கச் செய்தல்.
- இயலாமை உள்ள நோயாளர்களுக்கு சுகாதாரம், புனர்வாழ்வு மற்றும் சமூக சேவைகளுக்கான மேம்படுத்தப்பட்ட அணுகல்.

**பொறுப்பு**

**சமூக நலனோம்புகை குறித்தொதுக்கப்பட்டுள்ளஅமைச்சு**

சமூக நலனோம்புகை குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சினுள் **இயலாமை உள்ள ஆட்களுக்கான தேசியப் பேரவை**(NCPD) தொடர்ந்தும் நிருவகிக்கப்படும்.

**ஆயினும், இது “ இயலாமை உள்ள ஆட்களின் நலனோம்புகைக்கான தேசியப் பேரவை” அல்லதுNCWPDஎன அழைக்கப்படும்.**

***வழி இரண்டு***

ஓரங்கட்டப்பட்ட மற்றும் விலக்கப்பட்ட இயலாமை உள்ள நபர்கள் அனைவரும், **'இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி”** என்னும் மூலோபாயமொன்றின் ஊடாக சமூக மற்றும் அபிவிருத்திப் பிரதான நீரோட்டத்தினுள் உட்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளையும் தெரிவுகளையும் கொண்டிருப்பர்.

- **இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி** அல்லது**DID**இனுள், எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி இடையீடுகளும் முற்போக்கான வகையில் இயலாமையை உட்படுத்திய[42] அபிவிருத்தி மூலோபாயங்களின் பிரதான நீரோட்ட திட்டமிடல், பயிற்சி, நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு, நடவடிக்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றில் இயலாமை உள்ளடக்கப்படும்[43].

**பொறுப்பு**

இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி, நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை, ஒருங்கிணைப்பு மற்றும் உள்ளகக் கண்காணிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான பயனுறுதி வாய்ந்த பொறிமுறைகளுடன் பல் அமைச்சு, பல்துறை மற்றும் பல்மட்ட மூலோபாயம் ஒன்றாக நடைமுறைப்படுத்தப்படும்[44].

ஆகவே, இது **இயலாமையை உட்படுத்தும் தேசிய ஆணைக்குழு** அல்லது **NDIC**[45]இன் பொறுப்பாக அமையும்.

கொள்கையின் அனைத்து அம்சங்களினதும் கண்காணிப்பு மற்றும் CRPD இன் நடைமுறைப்படுத்தல் ஆகியவை, NDICஇற்கு வெளியேயுள்ளதான மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் (HRC)மேற்கொள்ளப்படும்.

இலக்கு

- இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் நிறைவேற்றப்படல்[46]
- இயலாமை உள்ள நபர்களுக்கான சமூக நீதி[47]
- இயலாமை உள்ள நபர்களுக்குக் கிடைக்கப்பெறும் வாய்ப்புகளும் தெரிவுகளும் தேசிய அபிவிருத்தி, அவர்களின் அறிவு அனுபவம் அத்துடன் சமமான பிரசைகளாக குறிப்பிடத்தக்க திறன்கள் மற்றும் இயலளவுகளுக்குப் பங்களித்தல்[48]
- சுகவாழ்வுடன் முழுமையானதும் நிறைவானதுமான வாழ்வொன்றை அனுபவிப்பதற்காக இயலாமை உள்ள நபர்களுக்குக் கிடைக்கப்பெறும் வாய்ப்புகளும் தெரிவுகளும் [49]

---

41 இயலாமை பற்றிய தேசியக் கொள்கையை(2003)அடிப்படையாகக் கொண்டது; இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான ஐநா சாசனம் (2006); இயலாமை பற்றிய தேசிய செயற்றிட்டம்(2014): தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டம்(2011, 2016)

42 CRPD உறுப்புரை 4 (2) “…இந்த உரிமைகளின் முழுமையான அடைவை முற்போக்கான வகையில் எட்டும் நோக்கொன்றுடன், ….”

43 UNDP. UNDPஇல் இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி. 2018. Op cit.

44 CRPDஇன் 33 ஆம் உறுப்புரையில் உள்ளவாறாகவும் UN OHCHRஇன் கருப்பொருள் சார் கற்கையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளவாறாகவும்.ஐநா பொதுச்சபை A/HRC/13/29

45 CRPD உறுப்புரை 33.1, தேசிய மையப் புள்ளி

46 இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான ஐநா சாசனம்; http://www.un.org/disabilities/default.asp?id=150. opcit 4

47 இயலாமை பற்றிய தேசியக் கொள்கை. சமூக நலனோம்புகை அமைச்சு, NPD 2003, op cit 12

48 இயலாமை பற்றிய தேசியக் கொள்கை. சமூக நலனோம்புகை அமைச்சு, NPD 2003, Ibid

49 இயலாமை பற்றிய தேசியக் கொள்கை. சமூக நலனோம்புகை அமைச்சு, NPD 2003, Ibid

## கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான வழி - ஒன்று:

**குறிக்கோள்:** வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழுகின்ற, வறிய மற்றும் பாதிப்புறு நிலையிலுள்ளோரின் நிலைமையையும் நல்வாழ்வையும் உயர்த்துதல்

**மூலோபாயம்:** இரு முனை மூலோபாயம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது -

- மிகவும் வறிய நிலையிலுள்ளவர்களும் தேவையுடையவர்களுமான இயலாமை உள்ள ஆட்கள் இருக்குமிடத்தைக் கண்டறிவதற்கான மிகவும் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன் மிக்கதுமான வழிகள்
- தரம் மற்றும் உள்ளடக்கம் ஆகிய இரண்டிற்கமைவாகவும் மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலை

**நடவடிக்கைகள்:** பின்வருவனவற்றை உள்ளடக்கும் சமூக நலனோம்புகை, சேவைகள்மற்றும் பாதுகாப்பு –

மாதாந்த பணக் கைமாற்றல்கள்(cash transfers); உதவிஉபகரணங்கள்மற்றும்உதவிதொழில்நுட்பம்

வழங்குதல்;

விசேட தொழிற்பயிற்சிக்கான வாய்ப்புகள்;
கல்வி, சுய தொழில், மருத்துவப் பராமரிப்பு, வீடுகள் நிர்மாணம், வீட்டினுள்ளான அணுகும் வசதி மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள்மேம்பாடு ஆகியவற்றிற்கு வசதியளிப்பதற்கானமானியங்கள்;

இயலாமை உள்ள மக்களின் குரல்களைப் பலப்படுத்துவதற்காக அவர்களின் அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்குஉதவிகள்;
இயலாமை உள்ள நோயாளர்களுக்கு சுகாதாரம், புனர்வாழ்வு மற்றும்சமூக சேவைகளுக்கான மேம்படுத்தப்பட்ட அணுகல்;

**முதலாவது வழியை நடைமுறைப்படுத்து வதற்கான பொறுப்பு** சமூக நலனோம்புகை, சேவைகள் மற்றும் பாதுகாப்பை வழங்குதல் எப்போதும் சமூக நலனோம்புகைத் துறையிலேயே இருந்து வந்துள்ளதுடன்தொடர்ந்தும் அவ்வாறே காணப்படும். இயலாமை உள்ள நபர்களுக்கான தேசியப் பேரவை (NCPD) தொடர்ந்தும் சமூக நலனோம்புகை குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சினுள்ளேயே நிருவகிக்கப்படும்.ஆயினும், “இயலாமை உள்ள நபர்களின் நலனோம்புகைக்கான தேசியப் பேரவை” (NCWDP)என இது அழைக்கப்படும்.

***ஆகவே, இயலாமை உள்ள நபர்களுக்கானசமூக நலனோம்புகை, சேவைகள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பில் மாற்றமெதுவும் இல்லை.***

***இயலாமை உள்ள நபர்களுக்கான தேசியப் பேரவை (NCPD) சமூக நலனோம்புகை என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சினுள்ளேயே தொடர்ந்தும் காணப்படும். ஆயினும், “இயலாமை உள்ள நபர்களின் நலனோம்புகைக்கான தேசியப் பேரவை” (NCWDP)என இது அழைக்கப்படும்.***

## கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான வழி - இரண்டு

**குறிக்கோள்:**

ஓரங்கட்டப்பட்ட மற்றும் விலக்கப்பட்ட இயலாமை உள்ள நபர்கள் அனைவரும், **"இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி"** என்னும் மூலோபாயமொன்றின் ஊடாக சமூகம் மற்றும் அபிவிருத்தியின் பிரதான நீரோட்டத்தினுள் உட்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளையும் தெரிவுகளையும் கொண்டிருப்பதுடன் தங்களின் உரிமைகளையும் முழுமையாகப் பெற்றுக்கொள்வர்[50].

> **இரண்டாவது வழியுடன்,இயலாமைக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான ஓர் இரண்டாவது மூலோபாயம், இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி *(DID)*என அறிமுகப்படுத்தப்படுகின்றது. *DID* பற்றிய மேலதிக விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது**

**இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி என்றால் என்ன?**

எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி இடையீடுகளும் முற்போக்கான வகையில் இயலாமையை உள்ளடக்கும் என்பதே **இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி** அல்லது DID என்பதன் பொருளாகும். அபிவிருத்தி மூலோபாயங்களின் பிரதான நீரோட்ட திட்டமிடல்,

பயிற்சி, நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு, நடவடிக்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றில் இயலாமை உள்ளடக்கப்படும்[51]. மேற்பார்வை, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு [52]ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான பிரதான விடயங்களின் மையப் புள்ளிகள் மற்றும் தொடர்புடைய சட்டங்களின் சட்டவாக்கம்[53] ஆகியவற்றிற்கான பயனுறுதி வாய்ந்த பொறிமுறைகளையும் DIDமேலும் உள்ளடக்குகின்றது.

**DIDநடைமுறைப் படுத்தலுக்கான மூலோபாயம்**

நடைமுறைப்படுத்தலுக்குத் தேவைப்படுத்தப்படும் DID மூலோபாயம் பல்அமைச்சு, பல்துறை மற்றும் பல் மட்டங்களிலுள்ள ஒன்றாக இருக்க வேண்டுமென முன்னைய பிரிவில் ஆவணப்படுத்தப் பட்டுள்ள கொள்கை விடயப் பரப்புகளின் ரதிபலிப்பு தெளிவு படுத்துகின்றது.

---

50 UNDP. UNDPஇல் இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தி. 2018. https://www.undp.org/content/dam/undp/library/Democratic%20Governance/Human%20Rights/UNDP-Disability_Inclusive_Development__accessible.pdf

51 உட்படுத்தும் அபிவிருத்திக்கான CBM கருவித்தொகுதி. https://www.cbm.org/article/downloads/54741/CBM-DID-TOOLKIT-accessible.pdf

52 OHCHR பயிற்சி வழிகாட்டியில் CRPDஇன் 33 ஆம் உறுப்புரை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. கையேடு நான்கு. நடைமுறைப்படுத்தலுக்கான நடவடிக்கைகள்; https://www.ohchr.org/Documents/Publications/CRPD_TrainingGuide_PTS19_EN%20Accessible.pdf

53 CRPD உறுப்புரை 4. பொதுக் கடப்பாடுகள். குறிப்பீடு: பொருத்தமான சட்டவாக்க, நிருவாக மற்றும் ஏனைய நடவடிக்கைகள் இந்த இயலாமைக் கொள்கை மற்றும் CRPD இன் நடைமுறைப்படுத்தலைக் கருத்திற் கொள்ளும் சட்டவாக்கம் எதுவும் தற்போதுவரை இல்லை. இயலாமையை உட்படுத்திய அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவதற்கும் 2016 பெப்ரவரி 08 ஆம் திகதி இலங்கையினால் வலுவாக்கம் செய்யப்பட்ட CRPD இன் நடைமுறைப்படுத்தலை இயலச்செய்யும் சட்டமாகவும் இத்தகைய சட்டவாக்கம் அவசியமானதாகும். இப்பிரிவில் விபரிக்கப்பட்டவாறாக, உள்நாட்டில் CRPD இன் 33.1, 33.2 மற்றும் 33.3 ஆம் உறுப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் தேவைப்படும். தேசியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தலின் ஊடாக CRPD உரிமைகள் கருத்திற் கொள்ளப்படுமென்பதால், வரைவுச் செயன்முறை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அத்துடன், இயலாமை உள்ள நபர்களின் பங்குபற்றலுடனான புதிய நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைகளும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். தேவைப்படுத்தப்படும் சட்டம் சிக்கலானதாக அமையுமென்பதால், புதிய சட்டத்தை வரைவதற்கு இலங்கை சட்ட ஆணைக்குழுவைக் கோரலாம் எனப் பரிந்துரைக்கப்படுகின்றது. இப்பிரிவில் மேலும் விபரிக்கப்படுகின்றவாறான சட்டவாக்கத்தைப் பார்க்க.

**பல்அமைச்சு:** ஏனெனில், நடைமுறைப்படுத்தலானது,பொது மக்களுக்கு பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கான ஓர் ஆணையைக் கொண்டுள்ள எதேனும் அல்லது அனைத்து அமைச்சுகளினதும் பொறுப்பாதல் வேண்டும்.

**பல்துறை:** ஏனெனில், நடைமுறைப்படுத்தலானது, அரசாங்கத்தினுள்உள்ள எதேனும் அல்லது அனைத்து அபிவிருத்தித் துறைகளினதும் பொறுப்பாதல் வேண்டும்.

**பல்மட்டங்கள்:** ஏனெனில், நடைமுறைப்படுத்தலானது,தங்கள் வீடுகளில் வசிக்கும் இயலாமை உள்ள நபர்களைச் சென்றடைய வேண்டுமென்பதுடன் உள்ளூர், மாகாண மற்றும் மத்திய மட்டங்களில் அபிவிருத்திநிருவாகங்களினால் அவற்றிற்கு ஆதரவளிக்கப்படுதலும் வேண்டும்.

**நடைமுறைப் படுத்தலுக்கான பொறுப்பு**

பல்அமைச்சு, பல்துறை மற்றும் பல் மட்ட மூலோபாயமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் அதியுயர் மட்டத்தில், சனாதிபதியின் அலுவலகத்தினுள் காணப்படும் நடைமுறைப்படுத்தற் பொறிமுறையொன்று தேவைப்படுத்தப்படுகின்றது. நடைமுறைப்படுத்தற் பொறிமுறையானது, அதன் அமைவிடம் மற்றும் CRPD[54]உள்ளிட்ட கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான தேசிய மையப் புள்ளி என்னும் அதன் ஒட்டுமொத்த வகிபங்கு ஆகியவற்றை பிரதிபலிப்பதற்காக **இயலாமையை உட்படுத்தும் தேசிய ஆணைக்குழு** அல்லது **NDIC**என அழைக்கப்படலாம். அரசாங்கத்தில் அதன் அதியுயர் மட்டத்தின் அமைவிடம் உரு 02 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**NDICஇன் தொழிற்பாடுகள்**

ஒட்டுமொத்தத் தொழிற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன;

- இயலாமைக் கொள்கையின் முற்போக்கான பேரளவிலான நடைமுறைப்படுத்தல்[55]
- கொள்கை தொடர்பான விடயங்களில் சனாதிபதிக்கு விதப்புரைகள்
- நடைமுறைப்படுத்தற் கொள்கைக்கு அவசியமான சட்டங்களின் சட்டவாக்கத்தை வரைதல் மற்றும் உறுதிப்படுத்துதல்
- மேற்பார்வை மற்றும்ஒருங்கிணைப்புடன்[56] நடைமுறைப்படுத்தலுக்கானஆதரவு மற்றும் பின்னாய்வு
- உள்ளகப் பதிவு, அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு முறைமைகளை விருத்தி செய்தலும் பேணுதலும்

---

54 "இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான சாசனத்தின் நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பிற்கான தேசியப் பொறிமுறைகளின் கட்டமைப்பு மற்றும் வகிபங்கின் மீதான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரின் அலுவலகத்தின் கருப்பொருள்சார் கற்கையில்"CRPDஇன்33 ஆம் உறுப்புரை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஐநா பொதுச்சபை A/HRC/13/29

55 CRPD உறுப்புரை 4 (2) "…இந்த உரிமைகளின் முழுமையான அடைவை முற்போக்கான வகையில் எட்டும் நோக்கொன்றுடன், …."
நடைமுறைப்படுத்தலுக்கான செயற்பாட்டுத் திட்டங்கள்(NAPD, NHRAP 2011 மற்றும் 2016) ஆக்கப்பட்டுள்ளதுடன் நடைமுறைப்படுத்தல் தாமதிக்கப்படாதிருப்பதற்காகஇவை முதற் சந்தர்ப்பத்திலேயே பயன்படுத்தப்படலாம். பின்னர், அக்கால நிலைமைக்கு மிகவும் உகந்தவை என உறுதிப்படுத்தப்படும் பொருத்தமான செயற்பாட்டுத் திட்டங்கள் ஆக்கப்படலாம்.

56 "இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான சாசனத்தின் நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பிற்கான தேசியப் பொறிமுறைகளின் கட்டமைப்பு மற்றும் வகிபங்கின் மீதான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரின் அலுவலகத்தின் கருப்பொருள்சார் கற்கையில்"CRPDஇன்33 ஆம் உறுப்புரை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஐநா பொதுச்சபை A/HRC/13/29op cit 52

**உரு. 02: இயலாமையை உட்படுத்தும் தேசிய ஆணைக்குழு (NDIC)[57]**
**தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பு முறைகளுடன் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைப்படுத்தற் கட்டமைப்பு**




| | |
|---|---|
| **NDIC தீர்மானங்களின் நிருவாகம்:** | சனாதிபதியின் அலுவலகத்தினுள் அமைந்துள்ள NDIC செயலகம் ஒன்றினூடாக மேற்கொள்ளப்படும். |
| **NDIC இன் கட்டமைப்பு** | சனாதிபதியினால் 5 – 6 ஆணையாளர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் தொழில்வாண்மையாளர்கள், கல்வியியலாளர்கள், சட்டத்தரணிகள், நிருவாகிகள், இயலாமை உள்ள நபர்கள், இயலாமை உள்ள பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் இயலாமைச் செயற்பாட்டாளர்கள், ஆகியோரிலிருந்து தலைவர் மற்றும் உப தலைவர் ஆகியோர் உள்ளடக்கப்படவுள்ளனர். |

57 CRPDஇன்33.1ஆம் உறுப்புரைக்கமைவாக, CRPD இனை நடைமுறைப்படுத்துவதற்கான மூலோபாயத்தை விதந்துரை செய்வதற்காக நியமிக்கப்பட்ட NCPDஇன் உப குழு(அறிக்கை, 22.04.2016ஆம் திகதிய NCPD கூட்ட அறிக்கையில் உள்ளது) மற்றும் 2016 ஏப்பிரல்/மே இணைக் கூட்டத்தில் NCPD இனால் நியமிக்கப்பட்டதும் உரிய அமைச்சின் அப்போதிருந்த மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) தலைமையிலானCRPDமீதான ஆலோசனைக்குழு ஆகியவற்றினால்இந்தப் பொறிமுறையும் கட்டமைப்பும் அங்கீகரிக்கப்பட்டன. இக்கூட்டத்தின் கூட்ட அறிக்கையில் கிடைக்கவில்லை, ஆயினும் கூட்டுத் தீர்மானம், 2016மே 25 ஆம் திகதிய NCPD கூட்ட அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**CRPD உடனான NDIC இன் உறவுநிலை:**

இக்கொள்கை மற்றும் ஆதரவுச் சட்டவாக்கம் ஆகியவற்றின் ஊடாக (கீழுள்ள சட்டவாக்கத்தைப் பார்க்க), முற்போக்கான வகையில் NDIC இனால் இயலாமை உள்ள நபர்களின் உரிமைகள் மீதான ஐநா சாசனம் (UN CRPD) நடைமுறைப்படுத்தப்படும்.
எமது நாடு CRPDஇனை 2016 பெப்ரவரி 08 ஆம் திகதி வலுவாக்கம் செய்தபோதும், இதன் மீதான நடவடிக்கைககளை முன்னெடுப்பதற்கு முறைசார் படிமுறைகளெவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

**அமைச்சு மட்டத்தில் நடைமுறைப் படுத்தல்**

பிரிவு மூன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையான கொள்கை விடயப்பரப்புகளில் எவற்றையேனும் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள விடயங்களிலும் பணிகளிலும் உள்ளடக்கியுள்ள அமைச்சு எதுவும் தனது சொந்தக் கொள்கைகளிலும் வரவுசெலவுத்திட்டம் உட்பட செயற்றிட்டங்களிலும் அவற்றை உள்ளடக்குவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும்[58].

**கொள்கை நடைமுறைப் படுத்தலின் கண்காணிப்பு**

NDICமற்றும் சமூக நலனோம்புகை துறைக்கு வெளியே அமைந்திருப்பதனால், மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் (HRC)மேற்கொள்ளப்படும்[59].
HRC இன் நோக்கு “மனித உரிமைகளை அனைவருக்கும் உறுதிப்படுத்தலும் சட்டவாட்சியை மேம்படுத்தலும் பாதுகாத்தலுமாகும்”எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[60].
HRC இன் பணி “சட்டத்திலும், கொள்கையிலும் மற்றும் பிரயோகத்திலும் அனைவரினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்தலை” உள்ளடக்குகின்றது[61].

ஆகவே, அனைத்துப் பிரசைகளைக் குறித்தும் HRCதனது அக்கறையை செலுத்துகின்றது. இயலாமைக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் கண்காணிப்பினை HRCஉட்படுத்தியுள்ளமையானது, சட்டத்தைப் போலவே மனித உரிமைகள் தொடர்பான அனைத்து விடயங்களிலும் இந்த நாட்டின் பிரசைகளாக இயலாமை உள்ள நபர்களின் சமத்துவத்தை வலியுறுத்துகின்றது.அதன் ஆணையினுள், உரிமைகளை நிறைவேற்றுதல் உள்ளடங்கலாக இயலாமைக் கொள்கையைக் கண்காணிப்பதற்கு குழுவொன்றை அல்லது அதனையொத்த அமைப்பொன்றை HRC அமைக்கலாம். இயலாமை உள்ள நபர்கள், பிரதான பங்கீடுபாட்டாளர்களாக இக்குழுவில் (அல்லது அதனையொத்த அமைப்பில்) பிரதிநிதித்துவம் செய்யப்படுவர்[62]

கண்காணிப்புத் தொழிற்பாட்டை மேற்கொள்வதற்காக சுயாதீன இயலாமை உரிமைகள் ஆணைக்குழு ஒன்றிற்கான விருப்பத் தெரிவொன்றை சிலர் வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வாறு அமைக்கப்படுமாயின், அதன் சொந்த சுயாதீன ஆணைக்குழுவைக் கொண்டுள்ள ஒரேயொரு ஓரங்கட்டப்பட் பிரசைகள் குழுவாக இது அமையும்.

---

[58] இயலாமை பற்றிய தேசியக் கொள்கை op cit 12

[59] CRPD உறுப்புரை 33.2

[60] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு http://hrcsl.lk/english/about-us/

[61] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு http://hrcsl.lk/english/about-us/

[62] CRPD உறுப்புரை 33.3

ஆகவே, இத்தகைய நடவடிக்கை, உட்படுத்துகை மற்றும் சமத்துவத்திலிருந்து இயலாமை உள்ள மக்களை நகர்த்தி, ஒரு தனியான பிரசைகள் குழுவாக அடையாளப்படுத்தும் அபாயத்தைக் குறித்தும் விழிப்புடனிருத்தல் வேண்டும். அவர்களை மீண்டும் தனியாகப் பிரிப்பதாகவும் இதனைக் கருத்திற் கொள்ள முடியும்.

**கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டவாக்கம்**

தற்போது வலுவிலுள்ள சட்டவாக்கம்“1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இயலாமை உள்ள நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம்[63]” ஆகும். அக்காலப்பகுதியிலிருந்து இடம்பெற்ற ஏதேனும் கொள்கை அபிவிருத்திகள் அல்லது CRPD இனை இது கருத்திற் கொள்ளாமையினால் தற்போது இது வலிதானதாக இல்லை.

**இயலாமைச் சட்டத்தின் அபிவிருத்தி:**2003ஆம் ஆண்டில் இயலாமை பற்றிய தேசியக் கொள்கையின் அங்கீகாரத்தைத் தொடர்ந்து,[64]முதலாவது இயலாமை உரிமைகள் சட்டமூலத்தை(DRB)[65] வரைவதற்காக 2004ஆம் ஆண்டில் பொறுப்பு வாய்ந்த அமைச்சு சுயாதீனக் குழுவொன்றை நியமித்தது[66].பூர்வாங்க அறிக்கையொன்று, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டு பொது மக்களுக்காக பகிரங்கப்படுத்தப்பட்டதுடன் பரிந்துரைக்கப்பட்ட உரிய மாற்றங்கள் முதலாவது வரைவினுள் கூட்டிணைக்கப்பட்டன. அந்நேரத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறாக, பொறுப்பு வாய்ந்த அமைச்சினால் இது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் DRB (2006)[67] இன் முதலாவது வரைவிற்கான அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டது.2009 ஆம் ஆண்டுவரை, முதலில் சட்ட வரைஞருடனும் பின்னர் பின்னர் சட்டத்துறைத் தலைமையதிபதி அலுவலகத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் குழு தொடர்ந்தும் அமைச்சிற்கு உதவியது[68].

2009 இல், புதிய அமைச்சரொருவர் அப்போதிருந்த வரைவை நிராகரித்ததுடன் பெயர் வெளியிடப்படாத சட்டத்தரணியொருவரைக் கொண்டு அதனை மீளவும் தயாரித்தார். அடுத்துறும் அமைச்சர்கள், காலத்துக்குக் காலம் பல்வேறு தனியாட்கள் (பெரும்பாலும் பெயரிடப்படதவர்கள்) மற்றும் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட பல மீள் வரைவுகள் மற்றும் மீளாய்வுகளுடன், தொடர்ச்சியாக வரைவுச் சட்டமூலங்களை புதிது புதிதாக தயாரித்ததுடன் இவற்றில் பல சட்ட வரைஞருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த வரைவுச் சட்டமூலங்கள் எவையும் சட்ட வரைஞருக்கப்பாற் சென்றடையவில்லை. பெரும்பாலும்,

---

63 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இயலாமை உள்ள நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம் (சமூக நலனோம்புகை அமைச்சு)

64 இயலாமை பற்றிய தேசியக் கொள்கை(2004) op cit 12

65 அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவில்இயலாமைச் செயற்பாட்டாளரும் தலைவருமான டாக்டர். பத்மனி மென்டிஸ் மற்றும் திருமதி லக்மாலி கப்ரால், டாக்டர். மல்லிகா கணசிங்க, செல்வி. மகேஸ்வரி வேலாயுதன் மற்றும் திரு. ஆர். எம். பி. எச். குணரத்ன ஆகிய நான்கு சட்டத்தரணிகள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர். திரு. குணரத்ன இயலாமைத் துறையையும் பிரதிநிதித்துவம் செய்தார்.

66 குழுவின் உறுப்பினர்கள் தங்களின் தனித் தகவுதிறன்களின் மீது நியமிக்கப்பட்டதுடன் பரந்த ஆணை தவிர்த்து அமைச்சிடமிருந்து எவ்வித அறிவுறுத்தல்களையும் பெறவில்லை. அவர்கள் அமைச்சின் செயலாளருக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்.

67 இயலாமை உரிமைகள் சட்டமூலம் (DRB) 2006சனவரி 31 ஆம் திகதிய வரைவு. சமூக நலனோம்புகை அமைச்சு

68 பத்மனி மென்டிஸ்: பொறுப்பு வாய்ந்த அமைச்சு மற்றும்இயலாமை உள்ள நபர்களுக்கான தேசியப் பேரவையின உறுப்பினர்களுடனான இடைவினைகள் 2004 - 2019

இயலாமை உள்ள நபர்களின் தேசியப் பேரவையின் (NCPD)[69]உறுப்பினர்களுக்கு மாத்திரமே இவ்வரைவுகள் கிடைக்கப்பெற்றன.

அமைச்சினால் நியமிக்கப்பட்ட வேறொரு குழுவினால் 2019 இல் தயாரிக்கப்பட்ட மிக அண்மைய வரைவானது தற்போது மீண்டும் சட்ட வரைஞரிடம் காணப்படுகின்றது[70]. இந்த 2019 இன் வரைவுச் சட்டமூலம்[71]CRPDஇன் உறுப்புரை 33.1 இல் சொல்லப்பட்டுள்ள நடைமுறைப்படுத்தற் பொறிமுறையை கருத்திற் கொள்வதற்குத் தவறியுள்ளது.

இந்தத் தற்காலிக செயன்முறையின் மூலமாகவே தற்போதுள்ள வரைவு உருவாக்கப்பட்டது. தெளிவாகவே, பல்வேறு காலப்பகுதிகளில், பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட இயலாமை உரிமைகள் சட்டமூலத்தின் அனைத்து முன்னைய வரைவுகளும் ரத்து செய்யப்பட வேண்டியுள்ளது. இவற்றிற்கான செலவுகள் கவலைக்குரியதே, ஆயினும், இயலாமை உள்ள நபர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படக்கூடிய சிறந்தவற்றிற்கு தகுதியானவர்கள். அத்துடன், பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டை வழங்கும் தேசிய சட்டவாக்கம் தகுந்ததாகவும் பொருத்தமானதாகவும் அமைவதுடன் கிடைக்கப்பெறும் நிதி மற்றும் வேறுவகையான வளங்களைக் கருத்திற் கொள்ளும் அதேவேளை தனது விருப்பு மற்றும் அதன் தேசிய மற்றும் சர்வதேச கடப்பாடுகள் (NPD மற்றும் CRPD), ஆகியவற்றிற்கமைய அரசு வழங்கக்கூடிய அதியுயர் அளவிலானவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

சட்டவாக்கம் தொடர்பான விதப்புரை: இயலாமை உரிமைகள் சட்டமொன்றை வரையும் செயன்முறையானது, புதிய வரைவுச் சட்டமூலமொன்றாக மீண்டும் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். CRPD[72]இனை இயலச் செய்யும் சட்டவாக்கமாக வடிவமைக்கப்பட்டு, இயலாமை பற்றிய தேசியக் கொள்கையின் சுருக்கமொன்றைக் (பிரிவு மூன்று)கொண்டுள்ள இந்தக் கொள்கைச் சுருக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியும். இப்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைகளுக்கான சட்டவாக்கங்களையும் இது மேற்கொள்ள வேண்டும். முன்மொழியப்பட்ட இயலாமை உரிமைகள் சட்டமூலமொன்றின் பல்பரிமாணப் பொருளடக்கத்தின் சிக்கலான தன்மையைக் கருத்திற்கொண்டு, புதிய சட்டமூலத்தை வரைவதற்கு இலங்கை சட்ட ஆணைக்குழுவைக் கோர வேண்டுமெனவும் விதந்துரைக்கப்படுகின்றது.அவ்வாறாயின், புதியதோர் இயலாமை உரிமைகள் சட்டமூலத்தின் தயாரிப்பில், பொருத்தமானதும் வெளிப்படையானதுமான நடவடிக்கை முறைகள் பின்பற்றப்படுமென எதிர்பார்க்கலாம்.

*******

---

69 Ibid

70 Ibid

71 வரைவு 28 மார்ச் 2019 (மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டது)

72 CRPDஇலுள்ள பின்வரும் உறுப்புரைகள் கொள்கையாக இங்கு உள்ளடக்கப்படவில்லை. இவை அரசின் நேர்மறை நடவடிக்கைகள் தேவைப்படுத்தப்படாத முதலாவது தலைமுறை உரிமைகள் என்பதுடன் இவை இயலச்செய்யும் சட்டவாக்கத்தில் உள்ளடக்கப்படவுள்ளன; உறுப்புரைகள் 10, 12, 14 – 18, 21- 23.

# இயலாமைக் கொள்கைச் சுருக்கம்

*பத்மனி மெண்டிஸ் மற்றும் பினேந்ரி பெரேரா*

2013 ஆம் ஆண்டிலிருந்து உரிமைகள் அடிப்படையிலான இயலாமை பற்றிய தேசியக் கொள்கையொன்றை இலங்கை கொண்டுள்ளது. இயலாமை உள்ளநபர்களின் உரிமைகள் மீதான ஐ.நா.சாசனம் (CRPD) 2016 ஆம் ஆண்டில் வலுவாக்கம் செய்யப்பட்டது. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக, இயலாமை பற்றிய தேசிய செயற்றிட்டமொன்று 2014 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டதுடன் தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டங்கள் (2011 – 2015 மற்றும் 2016 – 2020) இரண்டில் இயலாமை உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆயினும் நாட்டிலுள்ள இயலாமை உள்ள நபர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதன் ஊடாக, பிரதிகூலங்களையும் இடர்களையும் ஒழிப்பதற்கும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எவையும் இற்றைவரை மேற்கொள்ளப்படவில்லை.

இப்பிரசுரம், பொருத்தமான உரிமைகள் அடிப்படையிலான கொள்கைகளையும் அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படலாம் என்பதையும் தீர்மானிப்பதில் சட்டவாக்குநர்கள், நிருவாகிகள் மற்றும் ஏனைய சிரேஷ்ட தீர்மானம் மேற்கொள்வோருக்கு உதவும் பொருட்டு அவர்களின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இயலாமை உரிமைகள் பற்றிய நடப்பு உரையாடல்களின் தற்போதைய நிலைமை பற்றி இயலாமை உள்ள நபர்களுக்கும் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் இது தெரியப்படுத்துகின்றது. இவ்வாறு தெரியப்படுத்துகையில், தொடரும் கருத்தாடல், கலந்துரையாடல், விவாதம் மற்றும் கருத்தொருமைப்பாடு ஆகியவற்றை விரிவுபடுத்தி, இலங்கையிலுள்ள இயலாமை உள்ள நபர்களின் உரிமைகளை அடைவதற்கு அண்மிக்கும் செயற்பாட்டிற்கு வழிவகுப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

ISBN: 978-955-580-241-3

9 789555 802413

INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES